ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1863/7 - 2014 මැයි මස 19 වැනි සඳුදා - 2014.05.19
*1863/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ், பேலியகொடை நகர சபையின் உப தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*உப தவிசாளர், தவிசாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக பேலியகொடை நகர சபையின் உப தவிசாளர் பதவி வெற்றிட மாகியுள்ளதாதலாலும் ;*

*மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 65அ(1) என்னும் பிரிவின் கீழ், அமில நிஷாந்த குமாரசிங்ஹ என்னும் உப தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான பேலியகொடை நகர சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. ஆனந்த புஷ்ப குமார காலஞ்சி தேவகே என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது பேலியகொடை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சில்லாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப் பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஆனந்த புஷ்ப குமார காலஞ்சி தேவகே என்பவர், பேலியகொடை நகர சபையின் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பீ. ஏ. எஸ். சேனாரத்ன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*பேலியகொடை நகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*கம்பஹா,*
*2014, மே 19.*

*06-34*

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*கேட்டு விலகுதல் காரணமாக புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 65அ(2) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு எம். ஏ. ஆர். இனாமுல் ஹசன் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த சுயேச்சைக்குழு இலக்கம் 08 இன் குழுத் தலைவருக்கு முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடைய ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு, என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடைய ஆளொருவராக திரு. எம். ஏ. ஆர். அலி சப்ரி என்பவரை மேற்குறித்த குழுவின் தலைவரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளாராதலாலும் ;*

*புத்தளம் நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பாக்கியராஜா ரகுநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) (ஆ) என்னும் பிரிவின் பிரகாரம் செயற்பட்டு, திரு. எம். ஏ. ஆர். அலி சப்ரி என்பவர், புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென்பதை இத்தால் வெளிப் படுத்துகின்றேன்.*

*பாக்கியராஜா ரகுநாதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*புத்தளம் நகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*புத்தளம்,*
*2014, மே 07.*

*06-35*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*